பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி - சென்னை - 4

17 10 2025 6 45

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் பொறுப்பான நிர்வாகத்தை உறுதிப்படுத்த வகை செய்யும் ஆதி கர்மயோகி திட்டம் தொடர்பான தேசிய மாநாடு இன்று புதுதில்லியில் நடைபெற உள்ளது.

2. சிறு விவசாயிகளின் நலனுக்காக வேளாண் அறிவியல் மையங்களை வலுப்படுத்துவது அவசியம் என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு. திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

3. தீபாவளியை முன்னிட்டு இன்று 2 ஆயிரத்து 165 சிறப்பு பேருந்தகள் இயக்கப்படும் என்று போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

4. விருதுநகர், தூத்துக்குடி உள்ளிட்ட 5 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

5. டென்மார்க் ஓபன் பேட்மிண்டன் ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு இந்தியாவின் லக்ஷயா சென் முன்னேறியுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் பொறுப்பான நிர்வாகத்தை உறுதிப்படுத்த வகை செய்யும் ஆதி கர்மயோகி திட்டம் தொடர்பான தேசிய மாநாடு இன்று புதுதில்லியில் நடைபெற உள்ளது.

இந்த மாநாட்டை குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு தொடங்கி வைக்கிறார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி அறிவித்த வளர்ச்சியடைந்த பாரதத்திற்கான தொலைநோக்கு பார்வையின்கீழ் இந்த மாநாட்டிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பழங்குடியினர் வசிக்கும் பகுதிகள் முழுவதும் முழுமையான வளர்ச்சியடைவதற்கு மத்திய அரசு மேற்கொண்டு வரும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் தொடர்பாக இதில் விவாதிக்கப்பட உள்ளது.

மத்திய பழங்குடியினர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. ஜுவல் ஓரம், இணையமைச்சர்கள், மத்திய மற்றும் மாநில அரசு அதிகாரிகள், மாவட்ட நீதிபதிகள் உள்ளிட்டோர் இந்த மாநாட்டில் பங்கேற்க உள்ளனர்.

பழங்குடியினர் பகுதிகளில் கல்வி, திறன் மேம்பாடு, சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து, வாழ்வாதாரம் உள்ளிட்டவற்றை வலுப்படுத்துவது தொடர்பாகவும் இந்த மாநாட்டில் விவாதிக்கப்பட உள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

<<<<>>>>

சிறு விவசாயிகளின் நலனுக்காக வேளாண் அறிவியல் மையங்களை வலுப்படுத்துவது அவசியம் என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு. திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

நேற்று புதுதில்லியில் அமைச்சர் தலைமையில் நடைபெற்ற உயர்மட்ட கூட்டத்தில் நாடு முழுவதும் உள்ள இந்த மையங்களை மிகவும் பயனுள்ளதாகவும், அதிகாரம் பெற்ற அமைப்பாகவும் மாற்றுவதற்கான உத்திகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

இதில் பேசிய அமைச்சர், நாடு முழுவதும் தற்போது 731 வேளாண் அறிவியல் மையங்கள் இருப்பதாகவும், அவற்றை விரிவுபடுத்துவது அவசியம் என்றும் கூறினார்.

விவசாயிகளுக்கு வேளாண் அறிவியல் தொழில்நுட்பம் குறித்து பயிற்சி அளித்தல், புதிய கண்டுபிடிப்புகளை அறிமுகம் செய்தல் ஆகியவற்றில் இந்த மையங்கள் முன்னுரிமை அளித்து செயல்பட வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

ஒருங்கிணைந்த விவசாயம் மற்றும் இயற்கை வேளாண்மையை ஊக்குவிப்பதோடு, அதற்கான மாதிரி முயற்சிகளை வேளாண் அறிவியல் மையங்கள் உருவாக்க வேண்டும் என்றும் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

தீபாவளியை முன்னிட்டு ஏராளமானோர் இன்றும், நாளையும் சொந்த ஊர்களுக்குச் செல்ல உள்ளதால் விரைவுப் போக்குவரத்துக் கழகம் சிறப்பு பேருந்துகளை இயக்குகிறது.

இன்று 2 ஆயிரத்து 165 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் என்று போக்குவரத்து துறை அமைச்சர் திரு. சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் சிறப்பு பேருந்துகளுக்கான ஏற்பாடுகளை நேற்று ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

(Voice Byte – Sivasankar – 52 Sec)

இந்நிலையில் தீபாவளிக்காக ஏராளமானோர் சொந்த ஊர் செல்வதால் ரயில் நிலையங்களில் அதிகமான கூட்டத்தை காண முடிகிறது.

திருப்பூரில் இருந்து ஏராளமான வட மாநில தொழிலாளர்கள் தங்களது ஊர்களுக்குச் செல்வதால் ரயில் நிலையங்களில் ரயில்வே பாதுகாப்புப் படையினரும், ரயில்வே காவல்துறையினரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

முன்பதிவில்லா பெட்டிகளில் நெரிசல் ஏற்படாமல் இருக்க வரிசையில் நிற்க வைத்து பயணிகள் செல்வதற்கு ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

<<<<>>>>

சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் வகையில் மாசற்ற தீபாவளியை அனைவரும் கொண்டாட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டு வருகிறது.

உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் தீபாவளியன்று காலை 6 மணி முதல் 7 மணி வரையும், இரவு 7 மணி முதல் 8 மணி வரையும் மட்டுமே ஒலியெழுப்பும் பட்டாசுகளை வெடிப்பதற்கு நேரம் நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில், திருப்பத்தூர் மாவட்டத்தில் அதை முழுமையாக கடைபிடிக்க வேண்டும் என்று மாவட்ட நிர்வாகம் கேட்டுக்கொண்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(Voice Byte – Anuradha – 47 Sec)

<<<<>>>>

தமிழகத்தில் 2 ஆயிரத்து 708 உதவிப் பேராசிரியர்களை நிரந்தரமாக நிரப்பிட ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இதனை மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. கோவி செழியன் தெரிவித்துள்ளார்.

பாடவாரியான காலிப் பணியிட விவரங்கள், கல்வித் தகுதி, வயது மற்றும் விண்ணப்பம் செய்வதற்கான அனைத்து விவரங்களும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

விண்ணப்பிப்பவர்கள் ஏற்கனவே முந்தைய அறிவிப்பின்கீழ் விண்ணப்பம் செய்திருந்தாலும், மீண்டும் தற்போது விண்ணப்பிக்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஏற்கனவே தேர்வுக் கட்டணம் செலுத்தியிருந்தால் தற்போது தேர்வுக் கட்டணம் செலுத்துவதில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பத்தினை இன்று முதல் அடுத்த மாதம் 10ஆம் தேதி வரை ஆசிரியர் தேர்வு வாரிய இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம் என்று திரு. கோவி. செழியன் கூறியுள்ளார்.

<<<<>>>>

கடலூர் மாவட்டம் வேப்பூர் அருகே நேற்று இடி தாக்கியதில் 4 பெண்கள் உயிரிழந்தனர்.

மக்களாச்சோளம் பயிரிட்ட நிலத்தில் களையெடுத்துக்கொண்டிருந்த போது இந்த சோக சம்பவம் நிகழ்ந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

சம்பவம் அறிந்து அந்தப் பகுதிக்குச் சென்ற காவல்துறையினர் சடலங்களைக் கைப்பற்றி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

காயமடைந்த ஒருவர் மீட்கப்பட்டு அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் உயிரிழந்த பெண் விவசாய தொழிலாளர்கள் 4 பேரின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் நிவாரண நிதியில் இருந்து போதிய நிவாரணம் வழங்க வேண்டும் என்று பல்வேறு அரசியல் கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

இதற்கிடையே மாநிலத்தில் வடகிழக்குப் பருவமழை தீவிரமடைந்துள்ளது.

சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களில் நேற்றிவும், இன்று அதிகாலையும் பரவலாக மழை பெய்தது.

கடலோர தமிழகம் மற்றும் குமரிக் கடல் பகுதியில் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக தமிழகத்தின் அநேக இடங்களிலும் இன்று இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

விருதுநகர், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, தென்காசி மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழை பெய்யும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம், தேனி, திண்டுக்கல், திருப்பூர், ஈரோடு, நீலகிரி, கோவை, மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<<<<>>>>**

*<u>இருவரிச் செய்திகள்</u>*

அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் ஹங்கேரியில் ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புதினை விரைவில் சந்தித்துப் பேச உள்ளதாக கூறியுள்ளார்.

**<<<<>>>>**

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் வன்முறையை தடுப்பதற்காக அங்குள்ள நிர்வாகம் 144 தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

<<<<>>>>

மகாராஷ்டிரா மாநிலம் புனேயில் மின்சாரத்தில் இயங்கும் கனரக வாகனத்தை அம்மாநில முதலமைச்சர் திரு. தேவேந்திர பட்னவிஸ் நேற்று தொடங்கி வைத்தார்.

<<<<>>>>

கர்நாடக மாநிலம் பெங்களூருவில் 117 கிலோ மீட்டர் பெங்களூரு வர்த்தக வழித்தடத்திற்கு அம்மாநில அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

<<<<>>>>

திண்டிவனத்தில் தொடர் திருட்டில் ஈடுபட்ட 3 பேரை காவல்துறையினர் கைது செய்து அவர்களிடமிருந்து 15 சவரன் தங்க நகைகளை பறிமுதல் செய்தனர்.

<<<<>>>>

தீபாவளியை முன்னிட்டு தமிழகத்தில் உள்ள 384 தீயணைப்பு நிலையங்களும் இயங்கும் என்று தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை அறிவித்துள்ளது.

<<<<>>>>

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு டாஸ்மாக் பணியாளர்களுக்கு 20 சதவீத போனஸ் வழங்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

<<<<>>>>

திருநெல்வேலி பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் அலுவலகத்தில் நேற்று லஞ்ச ஒழிப்புத்துறையினர் திடீர் சோதனை நடத்தி கணக்கில் வராத 2 லட்சத்து 94 ஆயிரம் ரூபாயை பறிமுதல் செய்தனர்.

<<<<>>>>

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு சென்னை சென்ட்ரலில் இருந்து இன்றும், நாளையும் போத்தனூருக்கு சிறப்பு ரயில் இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

டென்மார்க் ஓபன் பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு இந்தியாவின் லக்ஷயா சென் முன்னேறியுள்ளார்.

Obense-யில் நேற்று நடைபெற்ற காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் லக்ஷயா சென் 21-13, 21-14 என்ற செட் கணக்கில் டென்மார்க்கின் Anders Antonsen-ஐ வீழ்த்தினார்.

ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சாத்விக் சாய்ராஜ் - ரங்கி ரெட்டி இணை 21-19, 21-17 என்ற செட் கணக்கில் சீன தைபேயின் Yang - Po - Han – Liu Kwang இணையை வீழ்த்தி காலிறுதிக்கு தகுதி பெற்றது.

<<<<>>>>

ப்ரோ கபடி லீக் போட்டியில் தமிழக அணி இன்று தில்லி அணியை எதிர்கொள்கிறது.

இந்தப் போட்டி தில்லியில் இன்றிரவு மணி 8.30க்கு நடைபெற உள்ளது.

<<<<The End>>>>